பத்தாம் வகுப்பு - அரசு பொதுத்தேர்வு -2023

தமிழ் - விடைக்குறிப்பு

பகுதி -1

1) சருகும் சண்டும்

2) அங்கு வறுமை இல்லாததால்

3) உழவு, ஏர், மண், மாடு

4) கருணையன், எலிசபெத்துக்காக

5) இலா

6) அருமை + துணை

7) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

8) அதியன், பெருஞ்சாத்தன்

9) நான்கு, ஐந்து ச, ரு

www.Padasalai.Net

10) மரபு வழுவமைதி

11) வினையெச்சத்தொடர்

12) சிலப்பதிகாரம்

13) பகர்வனர் : பட்டினும்

14) நெசவாளர்

15) அகிலும் : சந்தனமும்

16) வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலியன.

17) அ. பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர் யார் ?

ஆ. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது எது ?

18) சதம் என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.

19) அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைத்து நிற்க விரும்பினார்கள். அதனால் அச்சிறப்பை அழியாத வகையில் கல்லிலும் செப்பேட்டிலும் பொறித்தார்கள்.

20) வழக்குகளை ஆராய்ந்து அறம் கூறும் மன்றங்கள் அவையங்கள் ஆகும். அவையம் பற்றி " அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் " என்கிறது புறநானூறு.

21) செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்

தியற்கை அறிந்து செயல்.

22) அ. உதகை. ஆ. நெல்லை

இ. சைதை. ஈ. குடந்தை

23) அ. சோற்றுக்கு ஒரு சோறு பதம்

ஆ. மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

24) ஒலி + த் + த் + உ

ஒலி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை , உ - வினையெச்ச விகுதி.

www.Padasalai.Net

25) அ . காப்புரிமை ஆ. புயல்

26) அன்புச் செல்வன் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

தொடுதிரை - வினைத்தொகை

27) அ. நண்பர்கள் இருவர் படிக்காமலேயே தேர்வு எழுதி தேர்ச்சி பெறலாம் என்று மனக்கோட்டை கட்டினர்.

ஆ. தாய் தன் குழந்தையைக் கண்ணும் கருத்துமாக கவனித்து வளர்த்தாள்.

28) வெண்பாவின் இலக்கணம் பெற்று இரண்டடிகளை உடையதாய் வருவது குறள் வெண்பா.

29) சங்க இலக்கியங்ள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்கும், அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவுகிறது.

அரசியல் அறம்:-

“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்”

நீர் நிலையைப் பெருக்கி நிலவளம் கண்டு, உணவுப் பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசினின் அறம். இவ்வறம் இன்றைய சூழலில் காணப்படுகிறது.

வணிகத்தில் அறம்:-

“அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்”

அறம் செய்வதில் வணிகநோக்கம் இருத்தல் கூடாது, நோக்கமின்றி அறம் செய்வதே வணிக அறனின் மேன்மையாகும்.

போர் அறம்:-

தமிழர் போர் செய்வதிலும், அறநெறி உடையவர்களாக இருந்தனர். போர் அறம் என்பது வீரமற்றோர், முதியோர், சிறார் போன்றவரை எதிர்த்து போர் செய்யாமல் இருப்பது.

உதவி செய்வதில் அறம்:-

பிறருக்கு உதவி செய்வதை அறமாகக் கருதினர். அதாவது தன்னைத் தாண்டி பிறரைப் பற்றி சிந்திக்கும் நிலை.பிழையா நன்மொழி” என்று நற்றிணையும் கூறுகிறது.

www.Padasalai.Net

30) அ. போலச் செய்தல் பண்பினைப் பின்பற்றி

ஆ. புரவி ஆட்டம், புரவி நாட்டியம்

இ. மராட்டியர் காலத்தில்

31) . சோலைக் காற்று : அடர்ந்த மரங்கள், நீர் நிறைந்த பூங்காக்கள் , செடிகள் கொடிகள் நிறைந்த குளிர்ச்சியான இடமே எனது இடம் ஆகும்.

மின்விசிறி காற்று ; நான்கு சுவர்கள் அடங்கிய அறையே எனது இருப்பிடம் ஆகும் .

2. சோலைக் காற்று : நான் எப்போதும் குளிர்ச்சி நிறைந்த காற்றையே வீசிக் கொண்டிருக்கிறேன்.

மின்விசிறி காற்று : நான் எப்போதும் வெதுவெதுப்பான சூடான காற்றையே வீசிக் கொண்டிருக்கிறேன்.

3. சோலைக் காற்று : மக்கள் மாலை நேரங்களில் பொழுதுபோக்கிற்காக தூய காற்றைப் பெற என் இருப்பிடம் தேடி வருகின்றனர் .

மின்விசிறிக் காற்று : வீட்டில் இருப்பவர்கள், பணி செய்பவர்கள் என் இருப்பிடம் தேடி வந்து காற்றைப் பெறுகிறார்கள்.

4 .சோலைக் காற்று : சிறுவர்கள் மாலை நேரங்களில் விளையாடுவதற்காகவும் காதலர்கள் பொழுதுபோக்கவும் நான் பயன்படுகிறேன்.

மின்விசிறிக் காற்று : எல்லா நேரங்களிலும் மனிதர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் நான் காற்று தந்து உதவுகிறேன்.

32) இடம் சுட்டல்: "சித்தாளு" என்னும் தலைப்பில் நாகூர் ரூமி எழுதியுள்ள கவிதையில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.

பொருள் : சித்தாளின் துன்பங்களைச் செங்கற்கள் அறிவது இல்லை.

விளக்கம் : அடுத்த வேளை உணவுக்காக சுமைகளை இறக்காமல் சுமக்கும் இவர்களின் மரணம்கூட சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும். பல இன்னல்களின் நடுவே தன் வாழ்வைத் தொலைக்காதிருக்க சுமை சுமக்கும் சித்தாள்களின் மனச்சுமையைச் செங்கற்களும், கற்களும் அறியாது

33) தமிழ் :

1. இயல் , இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது .
2. முதல் , இடை , கடை ஆகிய முச்சங்கங்கள் வளர்க்கப்பட்டது .
3. ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
4. சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது .

www.Padasalai.Net

கடல் :

1. முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது .
2. வெண்சங்கு , சலஞ்சலம் , பாஞ்சசன்யம் என மூன்று சங்குகளைத் தருகிறது .
3. மிகுதியான வணிகக்கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது .
4. அலைகளால் சங்கினைத் தடுத்து காக்கிறது .

34) அ. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி

மருளை அகற்றி மதிக்கும் தெருளை

அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்

பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

ஆ. மாற்றம் எனது மானிடத் தத்துவம்;

மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!

எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை

என்ப தறிந்து ஏகுமென் சாலை!

35) மல்லிகைப்பூ - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

மல்லிகை - சிறப்புப் பெயர் ; பூ - பொதுப்பெயர்

2. பூங்கொடி - உவமைத்தொகை பூ போன்ற கொடி எனப் பொருள்

3. தண்ணீர்த் தொட்டி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. தண்ணீரை உடைய தொட்டி( ஐ) .

4. குடிநீர் - வினைத்தொகை

குடி நீர் , குடிக்கின்ற நீர் , குடிக்கும் நீர் என மூன்று காலங்களில் வரும் .

5. குடிநீர் நிரப்பினாள் - இரண்டாம் வேற்றுமைத் தொகை

குடிநீரை நிரப்பினாள் ( ஐ).

6. சுவர்க் கடிகாரம் - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

சுவரின் கண் உள்ள கடிகாரம் எனப்பொருள்படும் .( கண் )

www.Padasalai.Net

36) இக்குறளில் பயின்று வரும் அணி உவமை அணி

தெரியாத ஒன்றை விளக்க, தெரிந்த ஒன்றை விளக்கி அதிலிருந்து நாம் கூற எண்ணி கருத்தினை விளக்குவது உவமை அணி ஆகும். உவமை அணியில் உவமானம், உவமேயம், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக வரும்.

விளக்கம்

செங்கோல் உடைய அரசன் ஒருவன் தன் அதிகாரத்தினை பயன்படுத்தி வரி என்ற பெயரில் மக்களிடம் பணம் வசூலிப்பது, வேல் முதலிய ஆயுதங்களை கொண்ட ஒரு வழிப்பறி செய்வதற்கு சமம் ஆகும்.

உவமானம் - வேலொாடு நின்றான் இடுஎன்றது

உமமேயம் - கோலொடு நின்றான் இரவு

உவம உருபு - போலும்

37) நாள்தொறும் - நேர், நிரை - கூவிளம்

நாடி - நேர், நேர் - தேமா

முறைசெய்யா - நிரை, நேர், நேர் - புளிமாங்காய்

மன்னவன் - நேர், நிரை - கூவிளம்

நாள்தொறும் - நேர், நிரை - கூவிளம்

நாடு - நேர், நேர் - தேமா

கெடும் - நிரை. - மலர்.

38) அ. மேகம் அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. மாவலி மன்னன் திருமாலுக்கு நீர்வார்த்துத் தரும்பொழுது மண்ணுக்கும், விண்ணுக்கும் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம்.

நற்சொல் கேட்டல் :

அங்கு , சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது . ஓர் இடைமகள் அதனைக் கண்டு ,குளிர் தாங்காமல் கைகளைக் கட்டியபடி " புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் இப்போது ஓட்டி வந்து விடுவார் . வருந்தாதே " என்றாள் . இது நல்ல சொல் என்று முதுப்பெண்கள் தலைவியிடம் "நற்சொல்லை நாங்கள் கேட்டோம் " என்று கூறினர் .

www.Padasalai.Net

ஆற்றுப்படுத்துதல் :

முதுப்பெண்கள் தலைவியிடம் சென்று " நற்சொல்லைக் கேட்டோம் ; நின் தலைவன் பகைவரை வென்று திரைப் பொருளோடு வருவது உறுதி . தலைவியே! மனத்தடுமாற்றம் கொள்ளாதே ! என ஆற்றுப்படுத்தினர்.

ஆ. வள்ளுவரின் சிறந்த அமைச்சருக்குரிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்தும் வகையில் குறள் வழியில் கருத்தை இங்கு பார்க்கலாம்.ஒரு தொழிலையோ அல்லது ஒரு செயலையோ செய்கின்ற பொழுது அதற்கு தேவையான கருவியை பயன்படுத்தி அதற்கு ஏற்ற காலத்தில் செய்யவேண்டும்.ஏற்ற காலம் இல்லாவிட்டால் அக்காலத்திற்கு காத்திருந்து அந்த காலம் வந்தவுடன் செயலை செய்து முடிக்க வேண்டும்.

அதோடு செய்கின்ற செயலின் தன்மையை அறிந்து செய்யும் முறையையும் அறிந்து செயல்பட வேண்டும்.அவ்வாறு செய்தால் அருமையான அழகிய செய்கைகளை செய்யமுடியும் என்பது கருத்து.மனவலிமை, குடிகாத்தல், நூல்களைக் கற்றல், ஆட்சி முறைகளை கற்றல், விடாமுயற்சி இந்த ஐந்தும் சிறப்பாக அமைப்பது அவசியம் என்பதை வள்ளுவர் குரள் வழியாக விளக்கிக் காட்டுகிறார்.இது அவருக்கு மட்டுமல்ல நமக்கும் பொருந்தக்கூடிய செய்தியாகும்.

39) அ.

10 04 .2023

அன்புள்ள மாமாவிற்கு ,

மாமா , இங்கு நான், அம்மா , அப்பா, தம்பி அனைவரும் நலமாக உள்ளோம் . அதுபோல் அங்கு நீங்களும் அத்தை , தாத்தா, பாட்டி , அனைவரும் நலமா ?மாமா ! நீங்கள் அவ்வப்போது கூறும் அறிவுரை எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது .

கடந்த புதன்கிழமை எங்கள் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடந்தது . இதில் கலந்து கொள்வதற்காக ஏராளமான பெற்றோர்கள் வந்திருந்தனர் . மதியஉணவு இடைவேளையில் நானும் என் நண்பனும் மரத்தடியில் அமர்ந்து உணவு உண்டோம். அப்போது தற்செயலாக அருகில் திரும்பிப் பார்த்தேன் . அங்கு ஒரு சிறிய பணப்பை கிடந்தது . நான் அந்தப் பையை எடுத்து பார்த்தேன் . அதில் 5000 ரூபாய் இருந்தது . நான் உடனடியாக அதை எங்கள் பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைத்தேன் . தலைமையாசிரியர் அதைப் பெற்றுக் கொண்டு என்னைப் பாராட்டினார். உடனடியாக ஒலிப்பெருக்கியில் அனைவருக்கும் தெரியும் வகையில் அறிவித்தார்.

தலைமையாசிரியர் ஒலிப்பெருக்கி மூலம் பணப்பையைத் தொலைத்தவர்கள் அதற்குண்டான அடையாளத்தைக் கூறிப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்தார். சற்று நேரத்தில் பணப்பையைத் தவறவிட்டவர் அதற்குண்டான அடையாளத்தைக் கூறிப் பணப்பையைப் பெற்றுக்கொண்டார். அதோடு அவர் என்னை அழைத்து , தலைமையாசிரியர் முன்பாகப் பாராட்டினார். என்னை வளர்த்த பெற்றோர்களையும் ஒழுக்கத்துடன் கல்வி கற்றுக் கொடுக்கும் பள்ளியும் பாராட்டினார் . நான் செய்த இந்த உதவிக்கு நினைவுப் பரிசாக "அக்னிச் சிறகுகள் " என்ற நூலினை எனக்குப் பரிசாக வழங்கினார்

www.Padasalai.Net

இப்படிக்கு

அஅஅஅ.

ஆ. அனுப்புநர் :

அஅஅஅ,

14, ஆஆஆஆ,

கும்பகோணம்.

பெறுநர் :

ஆய்வாளர்.,

சுகாதாரத்துறை அலுவலகம்,

தஞ்சாவூர்.

10 03 .2020 .

ஐயா,

பொருள் :

மருந்தின் பயன்பாட்டுத் தேதி முடிவடைந்து வழங்கிய மருந்தகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கடிதம்.

நேற்று மாலை என் தாத்தா எனக்கு உடல்நிலை குறைவு ஏற்பட்டதால் மருந்து வாங்க சென்றார். அந்த மருந்து பயன்பாட்டுத் தேதி முடிவடைந்துவிட்டது. அவ்வாறு முடிவடைந்த மருந்துகளை விற்கும் அக்கடையின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இப்படிக்கு,

உறைமேல் முகவரி :

பெறுநர் ::

ஆய்வாளர்.,

சுகாதாரத்துறை அலுவலகம்,

தஞ்சாவூர்.

40). பொருத்தமான கவிதை எழுதியிருப்பின் மதிப்பெண்.

41) நூலக உறுப்பினர் படிவம்

நீலகிரி மாவட்ட நூலக ஆணைக்குழு

அட்டை எண் : 0087 உறுப்பினர் எண் : 112114

1. பெயர் : அமுதன்

2. தந்தை பெயர் : மாணிக்கமணி

3. பிறந்த தேதி : 16-03-2008

4. வயது : 14

www.Padasalai.Net

5. படிப்பு : பத்தாம் வகுப்பு

6. தொலைபேசி எண் : 9443740120

7. முகவரி. : 15, காந்தி தெரு , , குமாரபாளையம் -612001.

காப்புத்தொகை :150 சந்தா தொகை 50 , மொத்தம் :200

தங்கள் உண்மையுள்ள

அமுதன்.

42) பள்ளியில் ,

அமைதி காப்பேன், ஆசிரியர்களை மதித்து நடப்பேன், பாடங்களை உடனே படிப்பேன். நண்பர்களிடம் சந்தேகம் கேட்பேன்.

வீட்டில் ,

அதிகாலை எழுந்து படிப்பேன், பெற்றோர்களை மதிப்பேன். அவர்கள் கூறுவதைக் கேட்பேன். ஓய்வு நேரத்தில் பெற்றோர்க்கு உதவுவேன்

43) முதல் 45 வினா வரை கட்டுரை வினாக்கள்

www.Padasalai.Net

முன்னுரை, பொருளுரை, முடிவுரை

பொருத்தமான உட்தலைப்புகளுடன் தெளிவான விடைகள் இருப்பின் உரிய மதிப்பெண்கள் வழங்கலாம்.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்

பட்டதாரி ஆசிரியர்

தி.ஆ.மேனிலைப்பள்ளி, திருவிடைமருதூர்

தஞ்சாவூர் மாவட்டம். தொலைபேசி -9443740120.

www.Padasalai.Net